செ.வெ.எண்:13 நாள்:09.07.2020

## கரூர் மாவட்டம்

**குளித்தலை மற்றும் தோகைமலை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 253 குக்கிராமங்களை சார்ந்த 13,144 குடியிருப்புகளுக்களுக்கு குடிநீர்வழங்கும் வகையில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.52.75கோடி மதிப்பில் பணிகள் முடிக்கப்பட்டு குடிநீர் வழங்குவதற்கான சோதனைஇயக்கப் பணிகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

கரூர் மாவட்டம் குளித்தலை மற்றும் தோகைமலை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 253 குடியிருப்புகளுக்களுக்கு குடிநீர்வழங்கும் வகையில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.52.75கோடி மதிப்பில் பணிகள் முடிக்கப்பட்டு குடிநீர் வழங்குவதற்கான சோதனைஇயக்கப் பணிகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (09.07.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் குளித்தலை மற்றும் தோகைமலை பகுதியில் 253 குக்கிராமங்களை சார்ந்த 13,144 குடியிருப்புகளுக்கு குடிநீர்வழங்கும் வகையில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.52.75கோடி மதிப்பில் அறிவிக்கப்பட்ட இத்திட்டமானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க துரிதபடுத்தப்பட்டு பணிகள் முழுவதும் தற்போது முடிக்கப்பட்டு நீருந்து நிலையத்தில் இருந்து நீரேற்று நிலையத்திற்கும், பிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் குழாய்கள் வழியாக குடிநீர் கொண்டுசெல்லும் சோதனை இயக்கப்ப பணிகள் நடைபெறுகின்றது. இந்தக்கூட்டுக் குடிநீர் திட்டமானது, நபார்டு வங்கி மூலம் ரூ.4252.00 இலட்சமும், மாநில அரசின் பங்களிப்பாக ரூ.1023.00 இலட்சங்களும் நிதி உதவி பெற்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில உள்ள 42 குக்கிராமங்களை சார்ந்த 2,144 குடியிருப்புகளுக்கும் மற்றும் தோகைமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 211 குக்கிராமங்களை சார்ச்த 11,000 குடியிருப்புகளுக்கும் என மொத்தம் 253 குக்கிராமங்களை சார்ந்த 13,144 குடியிருப்புகளுக்கு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 55 லிட்டர் வீதம் வழங்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு குளித்தலை ஒன்றியம் வதியம் ஊராட்சிக்கு அருகில் உள்ள காவிரி ஆற்றில் 6.00 மீட்டர் விட்டமுள்ள நீர் சேகரிப்பு கிணறு அமைக்கப்பட்டு, அங்கிருந்து 60 குதிரைத்திறன் கொண்ட இரண்டு மின் மோட்டார்கள் மூலம் 12,800 மீட்டர் நீளமுள்ள 300 மி.மீ. விட்டமுள்ள தேனிரும்பு குழாய்கள் மூலம் இரத்தினம்பிள்ளை புதூர் காலனி அருகில் அமைக்கப்பட்டுள்ள 16.05 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டிக்கு அனுப்பப்படுகிறது. இந்த மோட்டார்கள் ஒவ்வொன்றும் ஒரு நிமிடத்திற்கு 1880 லிட்டர் தண்ணீரை 65 மீட்டர் உயரத்திற்கு உந்தும் சக்தி கொண்டது.

இந்த தொட்டியிலிருந்து குளித்தலை மற்றும் தோகைமலை ஊராட்சிகளில் பல்வேறு இடங்களில் அமையவுள்ள 29 தரைமட்ட தொட்டிகளுக்கு பிவிசி மற்றும் தேனிரும்பு குழாய்கள் மூலமாக நீர் ஏற்றப்படுகிறது. இந்த தரைமட்ட தொட்டிகளிலிருந்து பிவிசி குழாய்கள் மூலமாக ஏற்கனவே கட்டப்பட்டுள்ள மேல்நிலை தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு, ஏற்கனவே பதிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் முழுமையாக முடிவுற்றுள்ள நிலையில் தற்போது குழாய்கள் வழியாக குடிநீர் அனுப்பப்பட்டு சோதனை இயக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு இத்திட்டம் கொண்டுவரப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

அனனைத்தொடர்ந்து அய்யர்மலை அருள்மிகு இரத்தனகிரீஸ்வரர் திருக்கோவில் மலையடிவாரப்பகுதியில் அய்யர்மலை ரிங்ரோடு முதல் வைரபெருமாள்பட்டி வரையிலும் 3.15 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.222.83 லட்சம் மதிப்பிலும், பனிக்கம்பட்டி முதல் நல்லூர் வரையிலும் 5.350 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.270.75 லட்சம் மதிப்பிலும் அமையவுள்ள சாலைப்பணிகளுக்கான பூமிபூஜை நிகழ்வில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு பணிகளைத் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, குளித்தலை சார் ஆட்சியர் திரு.ஷே.ஷேக்அப்துல்ரகுமான்.இஆப., மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.எம்.எஸ்.கண்ணதாசன், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்வர்கள் திரு.விஜயவிநாயகம் (குளித்தலை), திருமதி.லதா (தோகைமலை), குளித்தலை நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.சோமுரவி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர் திரு.பிரபுராம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளயீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.